Praise the Lord: இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்.

இருதயத்தை ஆராய்கிறவரும் உள்ளிந்திரியங்களைச் சோதித்தறிகிறவருமாயிருக்கிறவர் நமது கர்த்தர் ஒருவரே. (Our LORD is the only one can search our heart and examine our mind)

அப்படி நம் இருதயங்களை ஆராய்ந்துபார்க்கிறவர் ஆவியின் சிந்தை இன்னதென்று அறிவார். (he who searches our hearts knows the mind of the Spirit)

அப்படிப்பட்ட கர்த்தரிடம் நாம் ஜெபிக்க இருக்கிறோம்.

அதற்கு முன் இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாக கர்த்தருடைய வசனங்களை வாசித்து ஜெபிக்க இருக்கிறோம். ஆமென்.

நாம் சாதாரணமாக வாசிக்காமல் ஆழ்ந்து சிந்தித்து வாசித்தோமானால், இந்த வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருப்பதை நாம் உணரலாம். ஆமென்.

**சங்கீதம்/Psalm 19:14** (பக்கம் 681)

என் கன்மலையும் என் மீட்பருமாகிய கர்த்தாவே, என் வாயின் வார்த்தைகளும், என் இருதயத்தின் **தியானமும்**, உமது சமுகத்தில் பிரீதியாயிருப்பதாக.

May the words of my mouth and the **meditation** of my heart be pleasing in your sight, O LORD, my Rock and my Redeemer. (NIV)

Let the words of my mouth, and the meditation of my heart, be acceptable in thy sight, O LORD, my strength, and my redeemer. (KJV)

## let us pray. ..

என் கன்மலையும் என் மீட்பருமாகிய கர்த்தாவே:/O LORD, my Rock and my Redeemer

இந்த உலகத்தின் ஆசை இச்சைகள் என்னை சுற்றி சூழ்ந்திருந்தாலும், அது என்னை ஆட்கொண்டுவிடாதபடி, என்னை நான் காத்துக்கொள்ள கர்த்தர் எனக்கு பெலத்தைக் கொடுக்க வல்லவர். என் கன்மலை. ஆமென்

அவரோடு ஒட்டிக்கொண்டு வாழ பிரயாசப்படும்பொழுது, இந்த உலக வாழ்க்கையின் எல்லா மனுஷருக்கும் நியமிக்கப்பட்டபடியே ஒரு நாள் மரணத்தை சந்திக்கும்போது, அந்த மரணத்திலிருந்து விடுவித்து என்னை மீட்க வல்லவர் என் மீட்பர். ஆமென்.

*என் கன்மலையும் என் மீட்பருமாகிய கர்த்தாவே:/O LORD, my Rock and my Redeemer*

என்ற வார்த்தையை வாசிக்கும் பொழுது, இப்படியும் நான் சிந்திக்கலாம். இன்னும் ஆழ்ந்து சிந்திக்கலாம் அல்லது சாதாரணமாக வாசிக்கவும் செய்யலாம்.

என் வாயின் வார்த்தைகளும்,

**மத்தேயு/Matthew 12:36** (பக்கம் 18)

மனுஷர் பேசும் வீணான வார்த்தைகள் யாவையும் குறித்து நியாயத்தீர்ப்பு நாளிலே கணக்கொப்புவிக்கவேண்டும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

But I tell you that men will have to give account on the day of judgment for every careless word they have spoken. (NIV)

But I say unto you, That every idle word that men shall speak, they shall give account thereof in the day of judgment. (KJV)

இந்த வசனம் என் இருதயத்திலே உணர்வோடு இருந்தால், விசுவாசத்தோடு நிலைத்திருக்குமானால், என் வாயின் வார்த்தைகள் கவனமாகவே இருக்கும்.

*என் வாயின் வார்த்தைகள் அவருக்குப் பிரியமாயிருக்கும். ஆமென்*

என் இருதயத்தின் **தியானமும்,**

**எபிரெயர்/Hebrews 4:12** (பக்கம் 301)

தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும் ஆவியையும், கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது.

நமது கர்த்தர் இருதயத்தைப் பார்க்கிறவர், இருதயத்தை அறிந்திருக்கிறவர், இருதயத்தை ஆராய்ந்துபார்க்கிறவர், இருதயங்களின் யோசனைகளை வெளிப்படுத்தி நியாயந்தீர்ப்பவர். ஆமென்.

*தேவனுடைய வார்த்தைகளை, வாசிப்பதோடு நிறுத்தாமல் அதை நான் தியானித்தால், இந்த ஜீவனுள்ள வசனங்கள் இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுத்து . . . எவைகள் என் கன்மலையும் மீட்பருமானவருக்கு பிரியமானது என வெளிப்படுத்திக்காட்டும்.*

*(Ref: Dictionary)*
தியானம்: Meditate: To think or reflect, especially in a calm and deliberate manner.
meditation: மனத்தை அலைபாயவிடாமல் ஒருமுகப்படுத்துவது.

பல நேரங்களில் நாம் ஆழ்ந்து சிந்திப்பது மிகவும் குறைவு.
சில நேரங்களில் நாம் ஆழ்ந்து சிந்திப்பதை தவிர்க்கிறோம்.
சில நேரங்களில் நாம் ஆழ்ந்து சிந்திக்க நேரமில்லாமல் தவிக்கிறோம்.
அந்த அளவிற்கு உலகத்து வாழ்க்கை நம்மை ஆட்கொள்கிறது.
***என் கன்மலையும் என் மீட்பருமாகிய கர்த்தாவே: என நாம் மன்றாடும்போது,***
***உலகம் நம்மை ஆட்கொள்ளாது. கர்த்தர் நம்மை ஆட்கொள்வார்.***
என் வாயின் வார்த்தைகளும், என் இருதயத்தின் **தியானமும்,**
உமது சமுகத்தில் பிரீதியாயிருப்பதாக.
(Dictionary)
பிரீதி: மனநிறைவு: மகிழ்ச்சி: Satisfaction, pleasure, propitiation.
pleasing, acceptable. (in English Bible)
உமது சமுகத்தில். . . in your sight
கர்த்தருடைய சமுகம், கர்த்தருடைய பார்வை நாம் ஆலயத்தில் இருந்து ஆராதிக்கும்போது மட்டுமல்ல. . . .எப்பொழுதுமே நம்மோடு இருக்கிறது.
அவருடைய பெயரே இம்மானுவேல் (தேவன் நம்மோடு இருக்கிறார்). . . .அப்படியானால்
என் வாயின் வார்த்தைகளும், என் இருதயத்தின் **தியானமும்,**
உமது சமுகத்தில் பிரீதியாயிருப்பதாக. என்று நாம் வேண்டும்பொழுது அதன் அர்த்தத்தை தியானம் செய்யுங்கள். ஆழ்ந்து சிந்தியுங்கள்.
இப்படி நமது தியானம் அவரது வசனமாக இருக்கும்போது, நமது இருதயம் அதிலே நிறைந்திருக்கும்போது, நமது வாயின் வார்த்தைகள். .
கர்த்தருக்கு சந்தோஷமாகவும் சம்மதமாகவும் இருக்கும்.
இருதயத்தின் நிறைவினால் . . . வாய் பேசும். ஆமென்.

இந்த ஜனங்கள் தங்கள் வாயினால் என்னிடத்தில் சேர்ந்து, தங்கள் உதடுகளினால் என்னைக் கனம்பண்ணுகிறார்கள் அவர்கள் **இருதய**மோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது. **(மத் 15:8)**
என்று இயேசுகிறிஸ்து சொல்வதை தியானித்து பாருங்கள்.
இந்த உலகத்தின் சூழ்நிலைகள் நம்மை ஆட்கொள்ளத்தான் செய்யும். அதை மேற்கொள்ள நம்மாலே முடியாது. கிறிஸ்துவின் கிருபையினாலே முடியும்.
*இப்படியே தியானித்துக்கொண்டேயிருந்தால், இந்த ஒரு வசனத்திற்கே நமது வாழ்நாள் போதாது.*
இந்த வசனங்கள் அனைத்தும் ஆவியாயும் ஜீவனாயும் இருப்பதை நாம் உணரலாம்.
நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும், இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கைபண்ணப்படும். (ரோமர் 10:10)
இந்த இரட்சிப்பு முடிவுபரியந்தம் நிலைத்து நிற்க,
அதிக பயத்தோடும் நடுக்கத்தோடும் நமது இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படுவோம். ஆமென்.

1 யோவான்/1 John 2:15-17 (**பக்கம்: 326**)
உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்புகூராதிருங்கள்; ஒருவன் உலகத்தில் அன்புகூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை.
ஏனெனில், மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவைகளெல்லாம் பிதாவினாலுண்டானவைகளல்ல, அவைகள் உலகத்தினாலுண்டானவைகள்.
உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோம்; தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான்.
உலகமும் அதின் இச்சையும் ஒருபுறம், தேவனுடைய சித்தம் இன்னொருபுறம்.
கலாத்தியர்/Galatians 5:17 (**பக்கம்: 262**)
மாம்சம் ஆவிக்கு விரோதமாகவும், ஆவி மாம்சத்துக்கு விரோதமாகவும் இச்சிக்கிறது; நீங்கள் செய்யவேண்டுமென்றிருக்கிறவைகளைச் செய்யாதபடிக்கு, இவைகள் ஒன்றுக்கொன்று விரோதமாயிருக்கிறது.

*வாய் ஒன்றை பேசும், இருதயம் வேறு ஒன்றை சிந்திக்கும்.*
*சில சமயம் இருதயம் ஒன்றை சொல்ல வாஞ்சிக்கும், ஆனால் வாயோ வேறு ஒன்றை உளரும்.*
*வெளிப்போராட்டத்தைவிட உள்போராட்டம் மிகவும் பெரியது.*

நமது தேவன் நமக்கு துணையும் நம்மை விடுவிக்கிறவருமாக இருக்கிறார்.

நான் இரட்சிக்கப்படுவதற்கு முன்,
இந்த உலகத்தின் வாழ்க்கையையும் மனிதர்களின் பேச்சுக்களையும் சிந்தனைகளையும் வார்த்தைகளையும், கர்த்தர் கொடுத்த சிறிய அறிவினால் சிந்தித்தபோது, அவைகளாலே . . எனக்கு எவ்வளவு மகிழ்ச்சி கிடைத்ததோ அவ்வளவுக்கு வருத்தமும் கிடைத்தது.
இந்த உலக வாழ்க்கை ஒன்றுமில்லாதது நிலையில்லாதது என்பதை அறிந்து கொள்ள எனக்கு பெரிய தத்துவங்களை படித்து ஆராயாமலே புரிந்து கொள்ள முடிந்தது.

கர்த்தருடைய கிருபையினாலே நான் இரட்சிக்கப்பட்ட பிறகு,
இந்த கிறிஸ்தவ உலக வாழ்க்கையையும் மனிதர்களின் பேச்சுக்களையும் சிந்தனைகளையும் வார்த்தைகளையும், கர்த்தர் கொடுத்த சிறிய அறிவினால் சிந்தித்தபோது, அவைகளாலே . . . .
இதிலேயும், எனக்கு எவ்வளவு மகிழ்ச்சி கிடைக்கிறதோ அவ்வளவுக்கு வருத்தமும் கிடைக்கிறது.
முதலில் நான் அறிந்து கொண்ட. . .இந்த உலக வாழ்க்கை ஒன்றுமில்லாதது நிலையில்லாதது என்பதை இன்னும் அதிகமாக நிச்சயப்படுத்துகிறது.

என்ன வித்தியாசம் எனது வாழ்க்கையிலே? முக்கியமான ஒன்றை பார்ப்போம். . .
ஒன்றுமில்லாத நிலையில்லாத இந்த உலக வாழ்க்கையின் பெலவீனங்களிலே நான் அழிந்து போகாமல் இருக்க எனக்கு பெலன் கொடுக்கும் கன்மலையான கர்த்தர் என்னோடு கூட இருக்கிறார்.

இந்த உலக வாழ்க்கையின் எல்லா மனுஷருக்கும் நியமிக்கப்பட்டபடியே ஒரு நாள் மரணத்தை சந்திக்கும்போது, அந்த மரணத்திலிருந்து விடுவித்து என்னை மீட்க வல்லவரான என் மீட்பர் என்னோடு இருக்கிறார். ஆமென்.

<u>என் கன்மலையும் என் மீட்பருமாகிய கர்த்தர்</u> என்னோடு இருக்கிறார் என்பது ஒரு வித்தியாசம்.
*உங்களுக்கு நேரம் இருக்கும்போது சங்கீதம் 19வது அதிகாரத்தை முழுவதுமாக வாசியுங்கள்.*
*இப்பொழுது மீண்டுமாக சங்கீதம் 19:14ஐ மட்டும் எல்லோரும் சேர்ந்து வாசிப்போம்.*
இந்த வசனத்தின்படி நமது வாயின் வார்த்தைகளும் இருதயத்தின் தியானமும் கர்த்தருக்கு சந்தோஷமாகவும் சம்மதமாகவும் இருக்குமானால், மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்த கிறிஸ்தவர்களாக நாம் வாழமுடியும்.
அப்பொழுது, நாம் அவருடைய ஆவியிலே நிறைந்தவர்களாகி,
கிறிஸ்துவின் அன்பிலே நிலைத்திருக்கவும்,
கிறிஸ்துவின் கட்டளைகளை பின்பற்றவும்,
கிறிஸ்துவுக்காக சாட்சியாக வாழவும்,
கிறிஸ்துவுக்காக கிரியை செய்ய பிரயாசப்படவும் முடியும்.
இது நம்மாலே எப்படியாகும் என்று வியாகுலப்படாமல் தேவனாலே கூடாத காரியம் ஒன்றுமில்லை என்று நம்முடைய முழு இருதயத்தோடும்,
முழு ஆத்துமாவோடும்,
முழு மனதோடும்,
முழுப் பலத்தோடும் விசுவாசித்து. . . .
கிறிஸ்து மூலமாக தேவனிடம் மன்றாட நாம் அனைவரும் எழுந்திருப்போம்.

## <u>Let us Pray</u>